விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 23 ஷவ்வால் 7 இதழ் 143

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-7-84


## மல்லாகம் நீதிமன்றம் பதிவேடுகள் அறை தீயிடப்பட்டது!

### பொதுமக்கள் அணைத்தனர்!

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் பதிவேடுகள் பேணும் அறையின் ஒருபகுதி தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 11-45 மணியளவில் அங்கு சென்ற ஆயுதம் தரித்த நான்கு இளைஞர்கள் காவலாளிகள் இருவரையும் ஒருமரத்தில் கட்டிவைத்துவிட்டு பதிவேடுகள் இருந்த அறையை உடைத்து உள்புகுந்தனர் என்றும் எண்ணெய் ஊற்றி அங்கிருந்த பொருட்களை தீயிட்டனர் என்றும் கூறப்படுகின்றது,

தீவைத்த பின்னர் இளைஞர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றவுடன் அயலில் உள்ள பொதுமக்கள் தீயை அணைத்து பொருட்கள் முழுமையாக எரிவதிலிருந்து காப்பாற்றியுள்ளனர்.

சிலபதிவேடுகளும் அங்கு கிடந்த சாக்குகள் சீலைகளும் எரிந்துபோயுள்ளன என்று கூறப்படுகின்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும்.

(8ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட பயணிகள் புதுடில்லி திரும்பினர்!

# கடத்தல் நாடகம் முடிந்தது

# சீக்கியர் சரணடைந்தனர்

(இஸ்லாமாபாத்)

**சீக்கியத் தீவிரவாதிகளின் விமானக் கடத்தல் 'நாடகம்' அவர்களின் எவ்விதக் கோரிக்கையும் நிறைவேறாதநிலையில் நேற்று நண்பகல் முற்றுப்பெற்றது!**

**ஸ்ரீநகரிலிருந்து புதுடில்லிக்குச் சென்றுகொண்டிருந்த இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்குக் கடத்திய எட்டு சீக்கியத் தீவிரவாதிகளும் விமானப் பயணக்கைதிகளை விடுவித்தபின்னர் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் நேற்று சரணடைந்தனர்- விடுவிக்கப்பட்ட விமானப் பயணிகளும், சிப்பந்திகளும் பாகிஸ்தான் விமானமூலம் நேற்றிரவு புதுடில்லி போய்ச் சேர்ந்தனர்.**

புதுடில்லி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த விமானம் பஞ்சாப் மாநிலத்திலிருந்து லாகூருக்கு கடத்தல்காரர்களினால் கொண்டுசெல்லப்பட்டது.

250 பிரயாணிகளுடனும், 9 விமானச்சிப்பந்திகளுடனும் இந்த விமானம் கடத்தப்பட்டது.

கடத்தல்காரர்கள் எவ்வித நிபந்தனையுமின்றிபாகிஸ்தான் அதிகாரிகளிடம் சரணடைந்ததாக நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

இந்த விமானத்தை லாகூருக்குப் பலவந்தமாகக் கடத்

(8ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'மனித உரிமைகள்' தொடர்பான கருத்தரங்கு இன்று காலை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடை

(8ம் பக்கம் பார்க்க)

## "இலங்கை இனப் பிரச்னை இந்தியாவின் முயற்சியை குழப்ப நடவடிக்கை"

### சென்னையில் 'அமிர்' அறிக்கை

சென்னை ஜூலை, 6

"இலங்கை இனப்பிரச்னைக்கு இந்தியா தமது முயற்சியில் அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை குழப்புவதற்கு இலங்கையில் முயற்சி நடக்கிறது."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (இ-வெ)

## யாழ். மாவட்டம்: இலங்கை வங்கி ஏழு கிளைகளில் மீண்டும் வழமைபோல் அலுவல்கள்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக்கிளைகளில் மூன்று கிளைகளைத்தவிர ஏனைய கிளைகளில் வாடிக்கையாளர்களின் நன்மைகருதி காசோலையுடன் பணமும் கொடுக்கல் வாங்கல் செய்யலாம் என்று மாவட்ட முகாமையாளர் திரு ஸ்ரீ ரங்கநாதன் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை, நெல்லியடி, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள இலங்கை வங்கிக்கிளைகளிலேயே பணம் கொடுக்கல் வாங்கல் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் இம் மூன்று கிளைகளிலும் பணம் கொடுக்கல் வாங்கல் செய்ய வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் பணம் கொடுக்கல் வாங்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்ட வங்கிக்கிளைகள் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரைக்கும் திறந்திருக்கும் என்றும் அவர் சொன்னார்.

யாழ். மாவட்டத்தில் (கிளிநொச்சி உட்பட) பத்து இலங்கை வங்கிக் கிளைகள்

(8ம் பக்கம் பார்க்க)

## சந்தியில் கிடந்த சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணி-அரியாலை வீதிச்சந்தியில் 50 வயதுடைய ஒருவரின் சடலம் பொலிஸாரினால் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். சிறுகுற்றத்தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் கே. முத்துத்தம்பி மரணவிசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார். இச்சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இறந்தவர் நீல மஞ்சள்

[8-ம் பக்கம் பார்க்க]


## தேவை

### கூலி ஒப்பந்தகாரர் (Labour Contractors)

எமது வேலைத்தலங்களில் எமது மேற்பார்வையின் கீழ் விரயமின்றி சிறந்த முறையில் பின்வரும் வேலைகளைச்செய்ய கூலிஒப்பந்தகாரர் தேவை.

(1) கொங்கிரீட் கல் அரிதல்
(2) பலகை அடித்தல்
(3) சுவர் கட்டுதல்
(4) பிளாஸ்ரரில் வேலை
(5) கம்பி கட்டுதல்
(6) கதவு. யன்னல் வேலைகள்
(7) பெயின்ரிங் வேலைகள்

தினசரி உணவு அட்வான்ஸ் பணமும் வாரஇறுதியில் கணக்குப் பார்க்கப்படும். குறைந்தது 10 பேருக்கு மேல் போட்டு வேலைசெய்யக்கூடியவர்கள் மட்டுமே உடன் தொடர்புகொள்ளவும்.

தலைமை அலுவலகம்:

மனோகரன் அன் வெற்றிவேல்

பொறியியலாளர்கள் - கட்டிட அமைப்பாளர்கள்
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23870

கிளை:
57, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24377 (738)


## நகைக் கடை உரிமையாளரிடம் ரூபா ஒரு லட்சம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

நகைக்கடை உரிமையாளர் ஒருவரிடமிருந்து சுமார் ஒரு லட்சத்து 11,125 ரூபா பெறுமதியான நகைகளும், ரொக்கப்பணமும் இனம்தெரியாத நபர்களால் வழிப்பறி செய்யப்பட்டுள்ளது.

தாவடியைச் சேர்ந்த கே. ராசரத்தினம் என்பவரே நகைகளையும் ரொக்கப்பனத்தையும் பறிகொடுத்தவராவார்.

கடந்த 30ந் திகதி இரவு, யாழ்ப்பாணத்திலுள்ள நகைக் கடையிலிருந்து சைக்கிளில்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். லயன்ஸ் தலைவராக அற்புதானந்தா தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகத் தலைவராக லயன் எஸ். அற்புதானந்தா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் பதவி ஏற்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் 'பாம் கோட்' ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு தலைவராக இருந்த லயன் பேராசிரியர் என் சரவணபவானந்தன் தமது காலத்திய சமூக சேவைகள் பற்றிய அறிக்கையை மேற்படி வைபவத்தில் சமர்ப்

(8ம் பக்கம் பார்க்க

## தீயணைக்கும்படை நிதி ரூபா 3 லட்சத்தைத் தாண்டிவிட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர ஆணையாளரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தீயணைக்கும் படைக்கான நிதி இப்பொழுது மூன்று லட்சத்தைத் தாண்டி விட்டது

விபரம் வருமாறு:

முன்தொடர்ச்சி ரூ 276,674,00

ரி, யேசுநாயகம், 3-ம் குறுக்குத்தெரு 1,000-00, மேச்ச

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்துக் கழித்த 45 கலன் வெற்று றம்கள் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப் பாணம். 703

---

யாழ். மாநகரத்தில் கண்டி ரோட் மாம்பழச் சந்திக்கருகில் நாவலர் வீதி கனகரத் தினம் வீதிச்சந்தியில் மூன்று பரப்புக்காணியும் பெரிய வீடும் (மின்சாரம், கிணறு வசதிகளுடன்) வெறுமையான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. முன்பகுதியை மருத்துவநிலையமாகவும் வர்த்தக நிலையமாகவும் உபயோகிக்கலாம். தொடர்பு: மாணிக்கவாசகர், 857, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். 730

---

நாவற்குழி-கேரதீவு வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய ஆறரைப்பரப்புக் காணி நன்னீர் கிணற்றுடன் விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு:- ஆர். பாலசுப்பிரமணியம், சட்டத் தரணி, வைமன் வீதி, யாழ்ப் பாணம், போன்: 22334. (687)

---

இணுவில் ஸ்ரேசனுக்கு 100 யார் தூரத்தில் யாழ்ப் பாணக் கல்லூரித்தோட்டத் திற்கு அருகில் 24 பரப்புக் காணி (5 in Blocks) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சின்னக்கோன், 107, கண்டி வீதி, சாவகச்சேரி. 678

---

சாவகச்சேரி சங்கத்தானையில், நகரசபை எல்லைக்குள் பாடசாலை, வைத்தியசாலை, சந்தை, தபாற்கந்தோர், புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு அண்மையில் மின்சார வசதியுடன் கூடிய வீடு கட்டக்கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: ச. கந்தசாமி, சங்கத்தானை உப தபால் அலுலலகத்துடன் தொடர்புகொள்ளவும். 682

---

கொக்குவில், குளப்பிட்டிச் சந்திக்கண்மையில் இரண்டு பரப்பு வெறும் காணியும், கொக்குவில் சேர்ச் ஒழுங்கையில் ஒரு பரப்பு வெறும் காணியும் உடனே விற்பனைக் குண்டு. நியாயமான விலையில் தரப்படும். உடன் தொடர்பு; திருமதி அனுஷியா நடேச லிங்கம், சட்டத்தரணி, செம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 719

---

யாழ். வளாக பின்புற தபால் பெட்டி ஒழுங்கை முகப்புக் காணி 4 பரப்பு பகுதியாகவோ முழுமையாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: லங்கா ரேடிங் அயன் வேக்ஸ், 71, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம், தொலைபேசி: 23856. (727)

---

மிருசுவில், பாம் வீதி (Farm Road) மேற்குப்பகுதியில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு அருகில் 2 பாரிய கிணறுகள், தென்னை செவ்விளநீர் பிள்ளைகள், மா, பலா, தோடை உட்பட 4 (நாலு) ஏக்கர் கமம்செய்யத் திறமான தோட்டம் விற் பனைக்குண்டு. விபரம்: K. B. சுந்தரம், நா. சாம்பசிவம் அன் கோ. 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 725

---

3 பரப்புக்காணி உடுவில் A.G.A's Office மிக அருகாமையில் விற்பனைக்கு உண்டு. பரப்பு ரூபா 40,000-க்கு மேல் விளம்பர இல. 729, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 729

---

FOR SALE

12 Sri Lancer Station Wagon with Radio and Air/Con. in good condition. Jimmy Rajaratnam, 24, Kandy Road, Jaffna. 740

## விற்பனைக்கு

H 100 S Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு. றவிச்சந்திரன் 308, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 662

---

Northtown Cross Broilers (சிவப்பு, கறுப்புப்புள்ளி) ரூபா 4/50. R.I.R., Light Sussex, கறுப்பு வான்கோழி நாள் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ராதாகிருஷ்ணஸ், 392, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி. [713]

---

A/L, O/L வகுப்புகளுக் கான மாதிரி வினாத்தாள்கள் (Tutorials) விற்பனைக்குண்டு. V. P. P. ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். Bond Institutes, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Phone:24258. (736)

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக் குள்பிரதானவீதியில் 500-1000 சதுர அடிக்கிடையில் ஒரு கடைக்கட்டிடம் (மின்சாரவசதியுடன்) தேவை. வாகனம் ஒதுக்க இடவசதியிருப்பது விரும்பத்தக்கது. தரகர்தேவையில்லை. தொடர்பு: விளம்பர இல:702,C/o ஈழநாடு, யாழ்ப் பாணம். [702)

---

யாழ். மாநகரசபை எல்லைக் குள் பிரதானவீதியில் 1/2 பரப்பு வெறுங்காணி (கட்டிடம் கட்டக்கூடியது) தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்க. தரகர்கள் விரும்பத் தக்கதன்று. விளம்பரஇல: 701, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (701)

---

1971ம் ஆண்டுக்குப் பிந்திய 12 வோல்ட்ஸ் - 1200 CC-வொக்ஸ்வாகன் கார் உடனடியாகத் தேவை. (12V- 1200CC-Volkswagon) நிறம், விலை, Extras போன்ற விபரங்களை விலாசத்துடன்அறியத்தரவும். மு. நவரத்தினராசா, 58/1, கலட்டி அம்மன் ரோட், யாழ்ப் பாணம். தொ லை பே சி இல. 23150 (676)

---

யாழ்ப்பாணத்தில் மாதாந்தம் 2000/- ரூபாவுக்குமேல் சம்பளம்பெற்று தொழில் நுட்ப அதிகாரியாய் (Technical officer) வேலைபார்க்கும் 31 வயது 5 அடி 8 அங்குல உயரமுள்ள மகனுக்கு பெற்றோர் மணப்பெண்ணைதேடுகிறார்கள் விபரங்கள் சாதகக் குறிப்பு புகைப்படத்துடன் (திருப்பி அனுப்பப்பெறும்) விளம்பர இல: 722. C/o ஈழநாடுலிமிட் யாழ்ப்பாணம். 722

---

**A/L 86**

**சனி, ஞாயிறு**

**வகுப்பு**

**2-00; பிரயோக கணிதம்**

**3-30: தூயகணிதம்**

**அண்மையில்**

**ஆரம்பமாகும்**

**இப்புதிய பிரிவுக்கு**

**பெயர்களை**

**பதிவு**

**செய்துகொள்ளவும்.**

TUTOR:

**Ravimohan**

74 A, மணிக்கூட்டு

கோபுர வீதி,

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

(671)

---

WANTED

Wanted experienced Book-Keeper part-time or full-time. Maintain set of books for two Theatres. Salary negotiable. Apply Santhi Theatre, Jaffna. 732

## வகுப்புக்கள்

கார் சாரதிப் பயிற்சி வகுப் புத் தொடங்கஉள்ளோம். கட்டணம் 300/.ரூபாவும், பெற்றோலும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். ஆ. இரத்தினசபாபதி, காளிகோவிலடி. தாவடி வடக்கு, கொக்குவில். [683]

## தவறிவிட்டது

4. 7. 84 காலை பெரியகடையில் தஸ்தாவேஜுகள், மூக்கு கண்ணுடியுடன் காணமற் போன கறுத்த கைப்பையை கண்டெடுத்துக் கொடுப்பவருக்கு சன்மானம் வழங்கப் படும். தொடர்பு செ. யோகானந்தம் 294 கண்டிவீதி யாழ்ப் பாணம். 733

---

# தேவை

**ஆங்கிலத்தில் நல்ல**

**தேர்ச்சியும்,**

**ஆங்கில தட்டச்சு,**

**சுருக்கெழுத்து**

சித்தியெய்திய

TYPIST CUM CLERK

தேவை

தமது சொந்தக் கையெழுத்தில்

10-7-84-இற்கு முன் விண்ணப்பிக்கவும்

BOND INSTITUTES

ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம். 735

---

## முக்கிய அறிவித்தல்
## மின் விநியோகம்

1984-ம் ஆண்டு யூலை மாதம் 08-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08-00 மணி தொடக்கம் பிற்பகல் 16-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் 132 கே.வி மின் மார்க்கம் தடைசெய்யவிருப் பதால் சுன்னுகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, யாழ்ப் பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்களில் மின் சார விநியோகம் தடைப் படும் என அறியத்தருகிறேன்.

மின்பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.

699

---

ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம், அளவெட்டி

# முக்கிய அறிவித்தல்

சங்கானை கிழக்கு, ''ஜோதிவாசா'' வில்வசிக்கும் S. சிறீதரன் என்பவர் தம்மை அமெரிக்க நாட்டின் சைவசித்தாந்த திருச்சபையினதும், அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினதும், குருதேவர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளினதும் இலங்கைப் பிரதிநிதி என்று அறிமுகம் செய்துகொண்டு மேற்படி ஸ்தாபனங்களுக்காகவோ குருதேவருக்கு வரவேற்பு பசாரம் அளிப்பதற்காகவோ பொதுமக்களிடமிருந்து பணம் சேர்ப்பதிலும், குருதேவரின் வருகை தொடர்பான நிகழ்ச்சிகள் தயாரிப்பதிலும் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது. ஆனல் இலங்கையில் சைவ சித்தாந்த திருச்சபையின் ஒரேயொரு கிளைஸ்தாபனம்

**அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம்**

மட்டுமே என்பதையும்,

திருச்சபையின்கீழ் இயங்கிவரும் மற்றுமொரு ஸ்தாபனம்

**கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்**

என்பதையும்,

S. சிறீதரன் என்பவரிடம் எவ்விதமானபொறுப்பையோ, அதிகாரத்தையோ ஒருவரும் ஒப்படைக்கவில்லை என்பதையும் இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தருகிறோம்.

Rev. Dr. சோ. சண்முகசுந்தரன்
இலங்கைப்பிரதிநிதி / நிர்வாக தர்மகர்த்தா,
**சைவ சித்தாந்த திருச்சபை,**
**ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமம்,**
அளவெட்டி.

4-7-1984. (696)

---

# பதவி வெற்றிடம்

லொறிச்சாரதிப் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் யாவும் 14-7-84-ந் திகதிக்கு முன்பாக**

**பொதுமுகாமையாளர்,**

**முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான்**

என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட வாசிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கல்வித்தகமைகள்:**

5-ம் வகுப்பு தராதரப்பத்திரத்துடன் பஸ் / லொறி / உழவு இயந்திரப்பெட்டியுடன் செலுத்துவதற்காக சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 4 வருட கால அனுபவம்.

**வயது:**

20 வயது தொடக்கம் 40க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

300 — 15 / 12; 20 / 3 — 540ம் ஏனைய படிகளும்,

**பிணை:**

ரொக்கம் 1500/- ஆதனப்பிணை: 10,000

**பொதுமுகாமையாளர்,**

**முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம்,**

ஒட்டுசுட்டான்.

(737)

---

## குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
## (Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :

(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services

STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD, MODEL MARKET, JAFFNA.

Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

● இந்திய விமானக்கடத்தல் நாடகம்:

# பயணிகள் விடுதலைக்கு

# அதிகளவில் கோரிக்கைகள்!

## ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பணயம்

லாகூர், ஜூலை, 6

**கடந்த மாதம் இராணுவ முற்றுகையின்போது சேதமாக்கப்பட்ட பஞ்சாப் 'பொற்கோயில்' திருத்த வேலைகளுக்கு இரண்டரைக்கோடி ரூபா தரப்படவேண்டும். அம்முற்றுகையின்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட மற்றும் அவர்களிடம் சரணடைந்த தீவிரவாதிகள் விடுதலைசெய்யப்படவேண்டும். பஞ்சாப் மாநிலத்திலிருந்தும், அம்மாநில எல்லைப் பகுதியிலிருந்தும் சகல பாதுகாப்புப் படைகளும் வாபஸ்பெறப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் இந்தியப் பயணிகள் விமானத்தைப் பணயம் வைத்துள்ள விமானக் கடத்தல்காரர்களால் விடுக்கப்பட்டுள்ளன.**

இக்கோரிக்கைகளுடன் மேலும் பல புதிய கோரிக்கைகளையும், அவர்கள் முன் வைத்துள்ளனர். அவற்றில் அகில இந்திய சீக்கிய மாணவ சம்மேளன பொதுச் செயலாளரை விடுதலைசெய்து அவரைத் தம்முடன் பேச அனுமதிக்கும்படியும், குருத்வாராக்கள் என்ற சீக்கிய வழிபாட்டுத் தலங்கள் யாவற்றையும் சிரோன்மணி குருத்வாரா பிரபந்தக்கமிட்டியிடம் கையளிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் பஞ்சாபில் இடம்பெற்றஇரு கொலைச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை வாபஸ்பெறும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரிலிருந்து புதுடில்லிவழியாக பம்பாய் செல்லும் வழமையான பயணத்தையே கடத்தப்பட்ட விமானம் மேற்கொண்டிருந்தது. ஸ்ரீநகரிலிருந்து புறப்பட்ட சில மணி நேரத்திலேயே அவ்விமானம் பாகிஸ்தானுக்கு கடத்தப்பட்டது.

தற்போது லாகூரில் நிறுத்தப்பட்டிருக்கும் அவ்விமானத்தில்ஒன்பது விமானச் சிப்பந்திகள் உட்பட 255 பயணிகள் இருக்கின்றனர். இப்பயணிகளில் 149 பேர் ஆண்கள், 72 பேர்பெண்கள், 19 பேர் சிறுவர்கள், 14 பேர் குழந்தைகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்கள், அகில இந்திய சீக்கிய மாணவ சம்மேளனத்தின் ஜம்மு-காஷ்மீர் மாநில பிரிவைச் சேர்ந்தவர்களென்று தெரியவந்துள்ளது.

ஏயர் இந்திய விமான சேவைக்கு சொந்தமான அந்த ஏயர் பஸ் விமானம் பாகிஸ்தான் ஆகாயப் பரப்புக்குள் நுழைந்ததும் கடத்தல்காரர்கள் அதனை இறக்குவதற்கு அனுமதி கோரினர். ஆனால் பாகிஸ்தான் அதிகாரிகள் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து தமது நாட்டின் சகல விமான நிலையங்களிலும் இந்த விமானம் தரையிறங்கத் தடை விதித்தனர்.

இத்தடையை அடுத்து கடத்தல்காரர்கள் விமானத்தைத் தகர்க்கப்போவதாக பயமுறுத்தினர். கூடவே விமானத்தின் எரிபொருள் அளவு மிகக்குறைவான கட்டத்தில் இருப்பதனைச்சுட்டிக்காட்டினர். இதனை அடுத்து பாகிஸ்தான் அதிகாரிகள் இந்தியாவுடன் தொடர்புகொண்டு எரிபொருள் குறைந்திருப்பதனை உறுதிப்படுத்திய பின்னரே லாகூரில் அவ்விமானம் இறங்க அனுமதியளித்தனர்.

கடத்தல்காரர்களுடன் தொடர்புகொண்டு பேச்சுக்களை நடத்த பாகிஸ்தானுக்கு இந்தியத் தூதுவர் திரு.கே.டி. சர்மா, பாகிஸ்தானின்பஞ்சாப் மாநில ஆளுநர் ஆகியோா முன்வந்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது அமைச்சரவையை அழைத்துஇக்கடத்தல் விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றூர்.

இரு வருடங்களுக்கு முன்னரும் இதுபோன்று பாகிஸ்தானுக்கு இந்திய விமானமொன்றை சீக்கிய தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். அக்கடத்தலை பாகிஸ்தானிய அதிரடிப்படையினர் சாதுரியமாக முறியடித்து பயணிகளை விடுவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடத்தல்காரர்கள் விடுத்த காலக்கெடு முடிவடைந்துள்ளபோதிலும் எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. [கி]

---

## "இலங்கைக்கு மத்திய கிழக்கிலிருந்தே அதிக பொருளாதாரம்"

(மானிப்பாய்)

''இங்கிலாந்து, அமெரிக்கா ஜேர்மனி போன்ற செல்வந்த நாடுகளுக்கு தொழில் தேடிச் சென்றுள்ள எமது இளைஞர்களையும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ள எமது இளைஞர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போதுமத்திய கிழக்கு நாடுகளிலிருந்தே அதிகளவு பொருளாதாரம் எமது நாட்டிற்கு கிட்டியுள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது''.

இவ்வாறு திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூகநிலையம் நடாத்திய மாதாந்தக் கருத்தரங்கு நிகழ்ச்சியின் இரண்டாவது கூட்டத்தில் உரையாற்றிய பொருளியல் ஆசிரியர் திரு. மா. சின்னத்தம்பி குறிப்பிட்டார். திரு. க. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் செயலாளர் திரு. ஆர். என். யோகேந்திரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினூர். திரு. வி. இரத்தினகுமார் நன்றியுரை கூறினூர்.

---

## ஜூலை அகதிகளுக்கு யாழ். வை. எம். சி. ஏ. உதவி

[அரியாலை]

கடந்த ஆண்டு ஜூலை வன்செயலால் பாதிக்கப்பட்ட வடபகுதி அகதிகள் முகாமில் தங்கியிருப்போருக்கு குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக யாழ்ப்பாண வை. எம். சீ. ஏ. ஸ்தாபனம் உலக வை. எம். சீ. ஏ. ஸ்தாபனங்கள் வழங்கிய நிதியுதவிகளைக் கொண்டு இயக்கருச்சியில் 67 வீடுகளையும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் தீயினூல்எரிந்து நாசமாக்கப்பட்ட வீடுகளுக்குப்பதிலாக எட்டு வீடுகளையும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகிறது.

இந்த வீடுகளைக்கட்டுவதற்கு கட்டிட ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விவிண்ணப்பங்களை வை. எம். சீ. ஏ. ஸ்தாபனத் தலைவர் திரு. எம். வி. திசைநாயகம் கோரியுள்ளார்.

---

## ஆனைக்கோட்டை கொலை வழக்கு: சந்தேக நபர் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கொலை வழக்கில் சந்தேகநபர் 5000 ரூபா பிணையில் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டார்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் இப்பிணைமனு எடுக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையில் 1983, ஜூலை22ம் திகதி என். சின்னத்தம்பி என்பவரைக் கொலை செய்ததாக சந்தேகநபர் எஸ். திருக்குமாரன் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

சந்தேகநபர்சார்பில் சட்டத்தரணி அமிர்தம் ராஜகாரியர் ஆஜரானூர். அரசதரிப்பில் சட்டத்தரணி குரொசட் தம்பையா ஆஜரானூர். [க]

---

## மூன்று வயதுச் சிறுமி கொலை!

சிங்கப்பூர், ஜூலை 6

ஆங்கில முதலெழுத்துக்கள் தெரியாதிருந்த காரணத்தால் தமது மூன்று வயது மகளை தந்தை ஒருவர் அடித்துக் கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வாரம் சிங்கப்பூரில் நிகழ்ந்தது. இது தொடர்பான வழக்கில் அத்தந்தை குற்றவாளியாகக் காணப்பட்டதுடன் அவருக்கு பத்து மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (கி)

---

## நாகபூஷணி மஞ்சம் இன்று

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 28ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆலய உற்சவம் தொடர்ந்து 15நாட்கள் வரை நடைபெறும்.

மஞ்சத்திருவிழா இன்று சனிக்கிழமை விஷேட சங்காபிஷேகம் கைலாசவாகனத்தில் அம்பாள் எழுந்தருளி விநாயக பெருமான், சுப்பிரமணியப் பெருமான் சகிதம் திருவீதியுலாவரும் அலங்காரக் காட்சியும், இரவு அம்பாள் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திரு மஞ்சத்தில் திரு வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறவுள்ளது.

---

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 5-30 | 'பிஜென்ஸ்ரீட்' |
| 5-45 | சிறுவர்நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-15 | சிறுவர்நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | சுருக்கள் பற்றிய நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 9-05 | இசை (சிங்களம்] |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'ஸ்வான்லேக்' (ஆங்கிலம்) |

---


## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

11/A, மொம்சாக் கட்டிடம்
(விவேகானந்தா அச்சகம் முன்பாக)
ஸ்ரான்லிவீதி, யாழ்நகர்.
T. P. 24111

உலகின் எப்பகுதிக்கும் குறைந்த செலவில் விமான டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்-

* டென்மார்க் செல்வதற்கு — (விசாவுடன் 22750/- இருவழிப் பயணம்)
* பிரயாணிகள் காசோலைகள் குறைந்த செலவில் செய்துதரப்படும்
* Passenger Sales Agent for AERO FLOT


---

## சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்: இலங்கைசார்பான விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை!

### லோக்தள் கட்சி குற்றச்சாட்டு

பெங்களூர், ஜூலை6,

''1964ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்தியாவுக்கும்-இலங்கைக்கு மிடையிலான சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்தியா சார்பான விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன ஆனல் இலங்கை அவ்ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்ட பல விடயங்கள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை ,,

இவ்வாறு பெங்களூரில் இடம் பெற்ற லோக்தள் கட்சியின் மாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் இலங்கையில் சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்த உடன்பாடுகளில் இலங்கை சார்பான விடயங்கள் நிறைவேற்றப்படாமைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது அத்துடன் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் இரண்டாந்தரப் பிரஜைகளகவே இருக்கின்றனர் என்றும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

### மணிவாக்கு

தொண்டு செய்யும் பேறு அவ்வளவு எளிதில் பெறக்கூடியதன்று. முதலில் விருப்பம்வேண்டும், பின்னர் அனுபவம் வேண்டும்.

— மகாத்மா காந்தி

# நமதுநோக்கு

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

''ஒடுக்கப்பட்ட மக்கள் அமெரிக்காவிலேயே தஞ்சம் அடைகின்றனர். கியூபாவிற்கோ, சுவரைக் கடந்து, கிழக்குப் பெர்லினுக்கோ, சோவியத் ரஷ்யாவுக்கோ அகதிகள் போவதில்லை'' என்று 208வது சுதந்திர தினத்தன்று அமெரிக்க ஜனாதிபதி றீகன் பெருமிதத்துடன் பேசியிருக்கிறார்.

ரஷ்யாவுடன் கொண்ட பிணக்கை மெதுவாகக் குறைந்த தொனியில் பேசிவந்த ஜனாதிபதி றீகன் இன்று மறுபடியும் கண்டனக் குரலை எழுப்பியிருப்பது வருகிற ஜனாதிபதி தேர்தலுக்கு பலமளிக்குமென்று கருதலாம்.

மனித சுதந்திரத்திரத்துக்கு அமெரிக்க தேசமே காவல் நாய்என்ற கருத்தை தேர்தல்போட்டியில் ஈடுபடுபவர் எல்லோருமே ஒப்புக்கொள்பவர்கள்.

எனவே இவ்வருட தேர்தலில் மீண்டும் போட்டியிடும் இன்றைய ஜனாதிபதிக்கு ஆதரவு கிடைப்பது எதற்காகவென்று கேள்வி எழும்.

ஜனநாயக கட்சி வேட்பாளர் திரு.வால்டர்மொண்டேல் தமது கட்சியின் ஆதரவைப் பெற்றிருப்பதால் அவருடன் போட்டிபோட்ட திரு. கெரி ஹார்ட் ஒதுங்கிவிடுவது நிச்சயமாகிற்று.

ஆரம்பத்தில் திரு. கெரி ஹார்ட் ஒரு கம்பீரமான தீவிர போக்குடைய சிந்தனையாளரென்று இளைஞர், படித்தவர்கள் மத்தியில் செல்வாக்கிருந்துவந்தது.

பொதுஜன அபிப்பிராய கணிப்பிலும்பழமைபாராட்டும் 'லிபரல்' கட்சியினரின் அனுதாபமும் திரு.எட்வார்ட் கெனடி திரு,மொன்டேலுக்கு அளித்துவரும் ஆதரவும் ஹாட்டுக்கு ஏற்கன இருந்த பலத்தைக் குறைத்துவிட்டன.

எனவே இன்றைய போட்டி குடியரசுக்கட்சி வேட்பாளர் இன்றைய ஜனாதிபதி றீகனுக்கும் ஜனநாயகக் கட்சியின் மொன்டேலுக்குமிடையே என்பது முற்றுகின்றது.

மற்றைய ஜனநாயக நாடுகளைப்போல இங்கு நடைபெறும் ஜனபதி தேர்தல் கட்சிகளுக்கிடையே அரசியல் சித்தாந்தத்தில் தீவிர வேறுபாட்டை வெளிப்படுத்துவதில்லை.

போட்டியில் பலபிரமுகர், பணம், செல்வாக்குப் போன்ற சாதனங்கள் அமமளிப்பட்டாலும் நாட்டின் தலைவிதி அரசியல் ரீதியில் அதிகமாற்றம்காண்பதில்லை. வரலாற்றுரீதியில் ஆராய்ந்து பார்த்தால் தீவிர கட்சிகள் எதற்கும் அமெரிக்காவில் இடமில்லாதுபோவதை அவதானிக்கலாம்.

'கன்சவேட்டிவ்' அல்லது 'லிபரல்' என்ற கோட்பாடுகள் இரண்டுமே மாறி மாறி மக்கள் ஆதரிப்பது வெளிப்படை.

'கன்சவேட்டிவ்' கட்சியின் நீண்டகால ஆட்சி றீகனின் பரிபாலனத்தில் உச்சநிலைக்கு வந்திருக்கிறது

முந்திய ஜனாதிபதி காட்டர் தமது கொள்கையில் இறுக்கமாயிருக்கவில்லையென்பதால் இரண்டாவது முறை வெற்றியீட்டமுடியவில்லை.

நான் ''அடக்கவேண்டிய அனைவரையும் அடக்கித் தருகிறேன்'' என்றுஉண்மையாக-வெறும் நடிப்பல்ல- உறுதியாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி றீகன் தம்முடைய வாக்குறுதியை நிறைவேற்ற முடிந்ததால் இன்று அமெரிக்காவுக்கு மட்டுமல்ல அகில உலகுக்குமே போர் என்ற திகில் உண்டுபட்டிருக்கிறது.

எங்கு பார்த்தாலும் ராணுவ அதிகரிப்பு; ஆயுதப்பரிகரணம் பரிகாசமாகிவிட்டது. மத்திய அமெரிக்காவில் அவசியமற்ற தலையீடு; விருத்தியடையும் மூன்ரும் உலகுக்கு நிதி. வர்த்தக உதவி நடவடிக்கைகளில் 'லோபம்' இவையெல்லாம் றீகன் ஆட்சியின் குறைகளென நாம் கொள்ளவேண்டும்.

இன்னும் ஊழல்கள் பல பேசப்படுவதும்; பட்ஜட் துண்டு விழுதலும் வேலையில்லாமையும் மேலதிக குறைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆனல் 'வாயாடி கையாடி, றீகன் எவற்றையும் சமாளித்து உலக அரங்கில் ஒரு ஆளுமையுடைய தலைவராகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் திறமையுடையவரென்பது மறுக்கமுடியாது.

வயதுவந்தவராக விருப்பதை அமெரிக்க, மக்கள் விரும்புவதில்லை ஆனல்தாக்குதலுக்கு ஆளானபோது அவர் அதனைத் தாங்கும் உரமான உள்ளமும், தாராளமான பண்பாடும் உடையவரென்பதையும் அவருடைய நகைச்சுவை நிறைந்த நடிப்பால் நாமறிய முடிந்தது.

அண்மையில் நடைபெற்ற பொதுஜன அபிப்பிராயக்கணிப்பில் அவருடன் போட்டியிடும் மொன்டேலுக்கு 43 வீதமும் றீகனுக்கு 53 வீதமும் காணப்பட்டது.

மரபுவகையில் ஜனநாயக ஆட்சிக்கு ஒரு வாய்ப்பு இம்முறைஇருக்கவேண்டும். திரு. றீகனின் சாதனைகள் முழுமையாகக் கணிப்பிடப்பட்டால் அமெரிக்க மக்கள் அமைதிக்கு உழைக்கும் ஒரு ஜனநாயக ஜனாதிபதிக்கே இடமளிக்கவேண்டும்.

இன்றைய ஜனாதிபதியின் தனிப்பட்ட திறமையும், தோல்விகளை மறைத்து, அவற்றை வெற்றிபோல் காண்பிக்கும் ஆற்றலும் அவரைத் தோற்கடிப்பது கடினமென்பதைக் காட்டுகின்றன.

## விதை வெங்காயம் கிடைப்பதில் தாமதம்; விவசாயிகள் ஏமாற்றம்

[கோப்பாய் நிருபர் மா. சத்தியலிங்கம்]

விதைவெங்காயம் இறக்குமதிகாலம் பிந்திய அதேவேளையில் விலையும் அதிகரித்து இறக்குமதி அளவும் குறைவடைந்துள்ளது.

கடந்தமார்கழி தைமாதங்களில் பெய்த பெருமழையினல் வடபகுதி விவாசாயிகளின் வெங்காயச்செய்கை முற்றுக நாசமபகியது: இதனல் விவசாயிகளுக்கு விதைவெங்காயம் முற்றுக இல்லாத இக்கட்டான நிலை தோன்றியது.

இதேநேரத்தில் ''விதை வெங்காயம் இந்தியாவில் இருந்து இறக்குமதிசெய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு அரசுநடவடிக்கைஎடுத்துள்ளது'' என்ற அறிவிப்பு சிறிதளவு ஆறுதல் அளித்தது.

விவசாயிகள் விதை வெங்காயத்திற்கான முற்பணமாக அந்தர் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் செலுத்தி தேவையான தொகையை பதிவுசெய்யலாம் என பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு அறிவித்திருந்தது.

உரியகாலத்தில் பயிர்ச் செய்கைக்கு விதை வெங்காயம் வந்து சேரும்என வழிமேல் விழிவைத்து காத்திருந்தனர்-உரியகாலத்தில் விதைவெங்காயம் வந்து சேரவில்லை

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று நவாலியூர் சோமசுந்தரப் புலவர்தினம்

### கவிமழை பொழிந்தவானம்

கோலமிகு செந்தமிழ் மேற்கொண்டதுவாம்
பெரும் பற்றுற் கவிதைமாரி
கால மெலாம் பொழிந்திட்ட வானனையான்
பண்புடையான் கருணை மிக் கோன்
ஞால மெலாம் படைத்துதவும் நம் பெருமான்
பதம் போற்றும் ஞானி ஆவான்
சீலமிகு நவாலியூர்ப் பெரும் புலவன்
தொண்டனைத்தும் நினைவிற்கொள்வோம்.

கன்ன லென அமுதமெனக் கனிச்சாறுய்
இனிக் கின்ற பாடல் செய்தோன்
அன்புநெறி அறத்து நெறி தெய்வநெறி
ஆகியவை அனைத்தும் தேர்ந் தோன்
முன்பு வரு தமிழ் மரபும் எதிர் காலத்
தேவைகளும் முற்றும் ஆய்ந்தே
நன்மை மிகு பணியனைத்தும் நாளெல்லாம்
புரிந்திட்டான் நாமம் வாழ்க.

ம. பார்வதிநாசிவம்

## அளப்பரிய சேவைகள் ஆற்றிவரும் மடத்துவெளி சனசமூக நிலையம்

யாழ்.குடாநாட்டின் சப்த தீவுகளில் ஒன்முன புங்குடுதீவினுள் நுழைந்ததும் பலரையும் கவர்ந்து நிற்பது மட்த்துவெளி சனசமூக நிலையம் (15.1.1954) இல் ஸ்தாபிக்கப்பட்டு சில ஆண்டுகள் இயங்கியபின் ஸ்தாபிதமடைந்து விட்டது. பின்பு மீண்டும் சில இளைஞர்களின் தீவிரமுயற்சியால் புனருத்தாரணம் செய்ய முயற்சியெடுக்கப்பட்டது. அதன்பலனுக 197-ம்ஆண்டு புதுப்பொலிவுடன் இந்நிலையச் செயற்பாடுகள் ஆரம்பமாகின. இங்குள்ள இளைஞர்களின் தளராத முயற்சியே இது.ஒரு தற்காலிக நிலையமொன்று அமைக்கப்பட்டு அதில் நூலகமும், படிப்பகமும் இன்று வரை இயங்கி வந்தது.

இப் பத்துவருட காலத்தில் நிலையம் அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்துள்ளது. பல புதிய வீதிகளைத்திறந்தும், சீரமைத்தும், நன்னீர் வசதி கருதி பலகிணறுகளை தோண்டுவித்தும்' சிரமதான வேலைகள் சுகாதார சேவைகள், சமூக விரோதச் செயல்களை ஒழிக்கும் பணிகளிலுமாகச் சிறந்து இயங்கியது. தீவின் கிழக்கின் மது ஒழிப்பில் இந் நிலையம் மறக்க முடியாத சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. தொடர்ந்து பத்து வருடங்களைப் பூர்த்தி செய்து பதினேராவது ஆண்டில் இதன் மிகையான சாதனைகளான வாசிகசாலையும், சிறுவர் பாடசாலையும் அடியெடுத்துச் சேவை புரிகின்றன. எந்தவித உதவியுமின்றி சொந்தக்காலிலே இயங்கி வந்தது.

கடந்த ஆண்டு நிலையத்திற்கெனபுதிய கட்டிடமொன்றை அமைக்கும் பணி ஆரம்பமானது. எந்த வித நிதியுதவியுமின்றி புங்குடுதீவு வாழ் பெருமக்களின் நன்கொடையின் மூலம் இன்றைய சூழ்நிலையின் இக்கட்டான நிலையிலும் பல்லாயிரக்கணக்கான செலவில் அழகான புதிய கட்டிடமொன்றை அமைத்துள்ளனர் 30,000 ரூபா பெறுமதியான இக் கட்டிட வேலைகள் முடிவுற்றதைத் தொடர்ந்து இம்மாதம் 7ம் திகதி நிலையம் திறந்து வைக்கப்படுகிறது.

நிலைய இயக்கத்தில், மது ஒழிப்புக்குழு, கல்வி, பொதுநல, விளையாட்டு, சிரமதான சுகாதார அபிவிருத்திக் குழுக்கள் என்ற ரீதியில் உறுப்பினர்கள் நிர்வகித்து வருகின்றனர். நிலைய அமைப்புக்கு முன்னின்று உழைத்து பல கிராமங்களின் மத்தியில் நிறைவேற்றியபெருமை திரு'ந.தர்மபாலனையேசாரும்.தேவையான நிதிசேகரிப்புப் பணியில் மா. தனபாலன்,அ.சண்முகநாதன், க. சந்திரசேகரம், போன்றோர் பாராட்டத்தக்கவர்கள். எல்லாவகையிலும் செயலாளர் பொ. அமிர்தலிங்கம் பாரட்டப்பட வேண்டியவர்.

சிவசந்திர பாலன்

## மறக்கமுடியாத மனிதன்



இன்று இரண்டாவது சிராத்த தினம்

விஞ்ஞானத்துறையில்யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஒரு கேந்திரஸ்தானம் வகிக்கின்றது குறிப்பாகக் கூறுவதானல் எங்கள் சிரேஸ்ட ஆசிரியர் சரவணமுத்து இளைப்பாறிய வருடத்தில் உயர்தர மாணவர்கள் உச்சசாதனை இயற்றினுர்கள். இதனைப் பத்திரிகைகள் பிரஸ்தாபித்தன: பிரச்சனை கிளம்பின. அதன் வரலாறு இன்னும் தொடர்கிறது. இப்பெறுபேற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் பாராட்டுக்குரித்தான போதும் அதற்கு அத்திபாரமிட்டவர் ஆசிரியர் சரவணமுத்து அவர்களென்பது பகிரங்க இரகசியம்.

மாணவர்களை நெறிப்படுத்துவதில் மிக்க சாதுர்யம் படைத்தவர் நண்பர் ''சரா'' பரீட்சையில் தவறியவர்களுக்கு மனஅமைதி ஊட்டுந்திறன் அவருடைய தனிச்சிறப்பு. ''தம்பிமாரே! ஆபிரகாம் லிங்கன் சொன்னதை மறந்து விடாதீர்கள்! வாழ்க்கையில் தோல்வி காணுதவன் எதனையும்சாதிக்கமாட்டான்'' என்று தேற்றுவது அவருடைய வழக்கம்.

33 வருட காலம் கல்லூரிக்கு உழைத்தார்; விஞ்ஞானக் கல்வி விருத்திக்கு ஆவனசெய்தார்; கட்டிடங்கள், உபகரணங்கள், பாடவிதானங்கள், மேலதிக போதனை, வருங்கால சவால்களுக்கேற்ற முன்னுணர்வு; அவைக்குரிய ஆலோசனைகள் இவையாவும் இவரின் பலதிறப்பட்ட ஆற்றலின் வெளிப்பாடாகும்.

கலந்துரையாடலில் களிப்படையும் நண்பர்கள் 'சரவணமுத்து மாஸ்டரை' நாடுவார்கள் அவர் நிற்கும், இருக்கும், நடக்குமிடமெல்லாம் ஒரு சிறு கூட்டம் நிச்சயம் காணப்படும். வெட்டு ஒன்று ஆனல் துண்டுகள் பல; குதூகலம், நகைச்சுவை, ஆரவாரம் நிரம்பும் சம்பாஷனை: மறக்க முடியாத மனிதன் இவர்.

மாணவர்களை, ஆசிரியசகாக்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் இவருடைய மனோவசியம் அசாதாரணமானது: எனவே கல்லூரி சமூகத்தில் அவருடைய செல்வாக்கு மிகுந்திருந்தது: அவருடைய திறந்த மனமும் நிறைந்தகுணமும் மக்களைக் கவர்ந்தன.

ஆசிரியப் பெருந்தகையின் மறைவால் மனவேதனைப்படும் நாம், விண்ணுலகில் வீற்றிருக்கும் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரிய குழாம் அன்னருக்கு அளிக்கும் வரவேற்பில் ஆறுதல் அடைவோமாக.

ச. ந. விசுவநாதன்

## அற்புதர் அந்தோனியாரின் புங்குடுதீவுத் திருப்பதி

அர்ச் அந்தோனியார் என்றுலே அவரின் அற்புதவரமருளும் தன்மைதான் ஞாபகத்திற்கு வரும். புனித அந்தோனியாரின் வாழ்க்கை வட்டத்தின் ஒவ்வொரு கணத்திலும் கிறிஸ்துவின் சாயலை அவர் தாங்கி நின்றுர், கிறிஸ்துவைப்போல் தாழ்ச்சியுடையவராக இருந்தார். கிறிஸ்துவைப்போல் மனித சேவையில் இறைசேவையைக் கண்டார் அவர். கிறிஸ்துவைப் போல் தன்னையே வெறுமையாக்கினுர். எந்த கிறிஸ்துவத்தில் தான் இன்பம் கண்டாரோ அந்த கிறிஸ்தவத்தை பரப்புவதில் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார். இவ் அரிய பணிக்காக ஆண்டவன் அவரைத் தமது புனிதராக்கி மகிமைப்படுத்தினுர், மக்களுக்கு அந்தோனியார் வாழ் நாளில் எவ்வாறு உதவியாக உறுதுணையாக இருந்தாரோ அவ்வாறே இன்றுவரை மக்களது துயர்துடைக்கும் துன்

(8ம் பக்கம் பார்க்க)

சந்தியோ அமிர்தராஜா

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி— (5-7-1984)
வாரம்— சனி
திதி— நவமி பிற்பகல் 2-21 மேல் தசமி
நக்ஷத்திரம் முற்பகல் 9-19ன் மேல் சுவாதி

மேடம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்து செல்வாக்கு பாதிக்கப்படும். அயலவர்களுடன் அன்புடன் நடந்து கொள்ளவும்.

இடபம்: எதிர்பாராத பணமுடை ஏற்படும் கடன்தொல்லையால் கஷ்டப் படுவீர்கள் தொழில் துறையில் தொல்லைகள் தோன்றி மறையும்.

மிதுனம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கலாம், சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு, தெய்வநம்பிக்கை வேண்டும்.

கடகம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பாராத பதவி உயர்வுக்கு இன்று முன்னேடி நடவடிக்கை எடுக்கப்படும வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

சிங்கம்: எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும் உத்தியோகஸ்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவார்கள் மக்கள் செல்வாக்கு மனதை குளிரவைக்கும்.

கன்னி: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், சிறிய விடயத்திற்குக் கூடக்குறைகேட்க நேரிம் கடற்றெழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும் துயர் படிந்த தினம்,

துலாம்: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும் இன்று களஸ்திர வழியால் பொருள் வரவும் உண்டு, பெரியோர்கள் மதிப்பு கிடைக்கும்.

விருச்சியம்: எதிர்பாராத வரவுமுண்டு. கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் பிணக்குகள் பலமடையும்.

தனு : புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள்.

மகரம்: தொழில் துறையில் முன்னேற்றம் தென்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்

(7ம் பக்கம் பார்க்க)

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை - ஒப்பிலியப்பன் சுப்ரபாதம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கத்தோலிக்க நற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள் - த. கனகரத்தினம்
7-00 ஆங்கிலபாடம்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-45 தாளவாத்தியக் கச்சேரி - ஜெ. ஜெகதீஸ்வரன்
9-15 தமிழ்மூலம் சிங்களம் -என், டி. பீரிஸ்
9-30 நாட்டுப்பாடல்
9-45 தகவல்
10-00 சங்கமம்
10-30 கதைப்பாட்டு -'நேர்மையான சிறுவர்'
10-45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிபரப்பு (பாலாம்பிகை நடரராஜா)
11-30 மாணிக்கமாலை
11-58 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலை:
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக்களஞ்சியம்
6-30 இசைப்பயிற்சி
6-45 லயவின்யாசம்-ஏ,ரகுநாதன்
7-00 நாட்டுக்கூத்து

இரவு:
7-30 உலகச்செய்தி
7-40 மெல்லிசைத்தேர்வு
7-45 செய்திச்சுருள்
8-90 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் - பக்திப் பாடல்
9-30 நாடகம் - ஒருகோலம் கலைக்கப்படுகிறதுசொர்ணம்
10-00 நாதஸ்வர ப்ருந்தகபனம்
10-30 ஒலிபரப்பு முடிவு.

## விதைவெங்காயம்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றம்.

தற்போது இறக்குமதிக்கு பொறுப்பான அமைப்பின் நிர்வாகிகளிற்கு கிடைத்த தகவலின்படி. இறக்குமதி செய்யப்படும் விதைவெங்காயத்தின் உத்தேசவிலை. 1300 ரூபா மட்டில் இருக்கலாம் என்றும்;

கிடைத்திருக்கும் 250 மெற்றிக்தொன் விதைவெங்காயமும் பகுதிபகுதியாக கிடைக்க விருப்பதுடன் முதலாவது தொகுதி வெங்காயம் இந்த வாரம் மட்டில் காங்கேசன் துறைமுகத்தை வந்துசேரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதுவெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு விளைநிலத்தை பண்படுத்திவைத்துக்கொண்டு காத்திருந்தவிவசாயிகளிற்கு பலத்த ஏமாற்றமாக அமைந்திருக்கின்றதாம்.

''இரண்டு மாதங்களிற்கு முன்முற்பணம் செலுத்தி பதிவுசெய்துகாத்திருந்த விவசாயிகளிற்கு இவ்வளவுகாலத்திற்கு பின்னரும் தேவையான அளவு விநியோகிக்காமல் காலம் கடத்துவது வடபகுதி விவசாயிகளிற்கு மழைவெள்ளத்தால் பாதிப்படைந்தபின்னர் ஏற்பட்ட எதிர்பாராத ''உளப்பாதிப்பு'' எனக்கூறி சலித்துக்கொண்டார் கிராமிய விவசாயிஒருவர்.

## காண்பதற்கு அரிதானவர்

செல்வி. பொன்மணி சபாரத்தினசிங்கி உடுவில் மகளிர் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கல்வி பயின்று லண்டன் இன்ரர் ஆட்ஸ் பரீட்சையில் சித்தி பெற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தமது முதல் ஆசிரிய பதவியை ஏற்றுர். 1946இல் நியமனம் பெற்றதும், ஆசிரிய சேவையிலிருந்து கொண்டே தமது மேற்படிப்பைத் தொடர்ந்தார். லண்டன் பட்டதாரிப் பரீட்சையில் சித்தியும் பெற்றுர். இவரைப் போன்ற பட்டதாரி ஆசிரியர்களை இன்று காண்பது அரிதாகும். 35 ஆண்டுகள் ஆசிரியப்பணியாற்றி தமது 60வது வயதில் இன்றுடன் [7.7.84ல்] ஓய்வு பெறுகின்றுர்.

செல்வி. பொன்மணி சபாரத்தினசிங்கி, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஐந்து ஆண்டுகளும், உடுவில் மகளிர் கல்லூரியில் இரண்டு ஆண்டுகளும், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஏழு ஆண்டுகளும், கொழும்புவூல்வொண்டால் மகளிர் கல்லூரியில் ஓராண்டும் வேம்படி மகளிர் கல்லூரியில் 15 ஆண்டுகளும் பணிசெய்தார். வேம்படியில் உப அதிபராகவும் கடமையாற்றினுர். பின்னர் 79ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை யாழ் சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் 5 ஆண்டுகள் உப- அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்றுர்.

ஆங்கிலம், தமிழ், சரித்திரம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் திறமைபெற்று விளங்கியவர். சேவையிருக்கும் பொழுதே பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாப் பரீட்சையிலும் சித்திபெற்றவர். ஆங்கிலம், இலக்கியம், சரித்திரம் முதலிய பாடங்களைக் கற்பிப்பது இவருக்குத் தனி இன்பமாக இருந்தது.

மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களில் நற்பண்புகளை இலக்கிய செல்வங்கள் மூலம்வேரூன்றச் செய்தார். இவரிடம்கல்வி கற்ற மாணவர் பலர் வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும், இல்லத்தரசிகளாகவும் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இவர்சேவையாற்றிய காலத்தில் பாடசாலைஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெற்றவர் இவர் சேவையினின்று ஓய்வு பெறுவதை முன்னிட்டு யாழ் சன்மார்க்க மகாவித்தியாலய ஆசிரியர்கள் பிரிவுபசார விழாவொன்றையும் சிறப்புடன் நடத்தவுள்ளனர்.

சி. சிவரத்தினம்



செல்வி சாயிஸ்வரூபினி கதிர்காமத்தம்பியின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை லண்டன் பாரதீய வித்தியாபவன் மண்டபத்தில் நடைபெறுகிறது. இவர் லண்டன் 'நடனப்பிரம்மம்' ஆசிரியை திருமதி கிரிஜாவரோதயசிங்கத்தின் மாணவியாவார். ஒன்பது வயதுள்ள இவர் டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி, திருமதி குணலஷ்மி கதிர்காமத்தம்பியின் புதல்வியாவார்.


## பித்தளை, அலுமினியம் வார்ப்பு வேலைகளில்

5 வருடத்திற்குக் குறையாத அனுபவமுடையவர்கள் உடனடியாகத் தேவைப்படுகிருர்கள். நற்சான்றுப் பத்திரங்களுடன் கீழ்க்காணும் முகவரியில் ஞாயிற்றுக் கிழமை (8-7-1984) 3—4 மணிக்குமிடையில் நேரில் தொடர்பு கொள்ளவும். சம்பள விபரம் நேரில்.

**Kris Enterprises**

(மாவடிச் சந்தி கந்தசாமி கோயில் முன்பு)
வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை (747)

## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ்க்காணும் வகுப்புகளுக்கான ஆரம்ப திகதி பலரின் வேண்டுகோளுக்கிணங்க பின்போடப்பட்டுள்ளது. வகுப்புகள் 15-7-84ல் தவருது ஆரம்பமாகும்.

★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
★ கொம்பியூட்டர் புரோகிறமிங் (COMPUTER PROGRAMMING)
★ எலக்ரோனிக்ஸ் டிப்புளோமா (DIPLOMA IN ELECTRONICS-CITY and GUILDS PART II)
★ மெக்கானிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (MECHANICAL ENGINEERING WORKS)
★ எலெக்ரிக்கல் எஞ்சினியறிங் வேர்க்ஸ் (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)
— 6 மாத கால பகுதி நேர வகுப்பு

★ படம் வரைதல் — பில்டர்ஸ் குவான்ரிற்றி உட்பட (DRAFTMAN SHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES) — 6மாதகாலம் கிழமையில் 5 நாள் வகுப்பு

★ கடைச்சல் யந்திரம் பயிற்சி (LATHE OPERATION) — 4 மாத காலம்

★ வெல்டிங் (ARC WELDING)
★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION)
— 3 மாத காலம்

★ மின் இணைப்பு (ELECTRICAL WIRING) — 6 வார காலம்

★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) — 1 மாத காலம்

இவ் நிறுவனத்தில் மாத்திரம் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில்

**13-07-1984க்கு முன் விண்ணப்பிக்கவும்.**

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மட்டுமே சேர்க்கப்படுவர். இவ் 15 பேரும் விண்ணப்பம் முதல் கிடைக்கும் வரிசையிலேயே சேர்க்கப்படுவர். ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

### நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

குறிப்பு:
கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services (Pte) Ltd.**

STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No: 22040, 22065. TELEX No. 2207 (C. T. S) C E

★ டென்மார்க் ★ BERLIN (பேர்லின்)
★ இத்தாலி ★ பிரான்ஸ்
போன்ற சகல நாடுகளுக்கு செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS

99 2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# யாழ். பஸ் நிலையத்தில் மலசலகூடம் தேவையில்லையாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில், மலசலகூட வசதி தேவையில்லை என்றும் மலசலகூட கட்டட வேலையைத் தொடர வேண்டாம் என்றும் போக்குவரத்து அமைச்சு, யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்திற்கு அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

யாழ் பஸ் நிலையத்தில் முன்பு மலசலகூடமிருந்த இடத்தில் நவீன மலசலகூட மொன்றை நிறுவ யாழ் மாநகர சபை ஆணையாளர் நிதி ஒதுக்கி அத்திவாரம்போடப்பட்டு கட்டட வேலையும் ஆரம்பிக்கப்பட்டது திடீரென்று போக்குவரத்து அமைச்சின் பணிப்பின் பேரில் இவ்வேலை நிறுத்தப்பட்டது.

இக் கட்டடத்தை தொடர்ந்து கட்ட அனுமதி வழங்குமாறு, யாழ் மாநகர சபை ஆணையாளர் போக்குவரத்து அமைச்சிடம் கோரியிருந்தார்,

இதற்குக் கிடைத்த பதிலிலேயே மலசலகூட வசதி தேவையில்லை என்று கூறப்பட்டுள்ளதாம்.

பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள நவீன மார்க்கட்டில் மலசலகூடமிருப்பதாகவும், மின்சார நிலைய வீதியிலும் மற்றொரு மலசலகூடமிருப்பதாகவும் ஆணையாளருக்குக்கிடைத்த பதிலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாம். (க)

இலங்கையின் அதி பசுமையான
முழு ஆடைப் பால் மா
ரூ. 18/25 மட்டுமே! (400 கிராம்)




எங்கள் சொந்த மலை நாட்டுப் பண்ணைகளில் கிடைக்கும் பசும் பால், அம்பேவெல தொழிற் சாலையில், 'துமி-உலர்' முறையில், பேர்ஷாக்கான ஹைலெண்ட் முழு ஆடைப் பால் மா ஆக்கப்படுகிறது. அதனுல் தான், செறிவான, செழுமையான ''ஹைலெண்ட்'', இங்கு கிடைக்கும் அதி பசுமையான பால் மாவாக விளங்குகிறது.

ஹைலெண்ட்
முழு ஆடைப் பால் மா

அதி பசுமை-அதி செழுமை-அதி சுவை

தேசிய பால் சபை உற்பத்தி

## இன்றையபலன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சிலருக்கு நன்மையான இடமாற்றமும் உண்டு.

கும்பம்: பணம் பல வழிகளிலும் செலவாகும் அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும் நிதானம் வேண்டும்,

மீனம்: வாழ்க்கையில் புதிரான நிலைதென்படும் எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக் கூடும் மனத்திடம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

---

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

---

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30,
4-45, 7-00
Chery Chase
MODERN PROBLEMS
(Adults Only)

---

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

---

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-15
கல்யாணகுமார் - தேவிகா
முத்துராமன்
**நெஞ்சில் ஓர் ஆலயம்**

---

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES
(Strictly for Adults)

---

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ஏ. வி. எம். ராஜன்
புஷ்பலதா
**பால் குடம்**
(புதிய பிரதி)

---

**றீகல்** (யாழ். நகர்)
7th to 13 th
10-30, 2-15, 4-30, 6-30
Roger Moore as
James Bond 007
in
''MOON RAKER''
Action-packed
Bond Adventure
நுட்பமானஅதிநவீனரக
ஆயுதங்களுடன்
ஜேம்ஸ் பொன்ட்

---

(3—8)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
7-00
FORCE FIVE
International Karate
(Color)

---

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 7-00
Sean Connery,
as James Bond 007
YOU ONLY LIVE TWICE

---

# ஓராண்டு நினைவஞ்சலி

## தெல்லிப்பழை

### திரு. நாகலிங்கம் சாந்தராசா

தோற்றம்:
03-11-1936

மறைவு:
07-07-1983



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைப் பிரிந்து ஓராண்டு பூர்த்தியாகின்றது. தங்கள் நினைவு என்றும் எமது வாழ்வில் வழிகாட்டும் ஒளி விளக்காய் நின்று நிலவும்

**மனைவி, பிள்ளைகள்.**

துர்க்கை அம்மன் கோவிலடி,
தெல்லிப்பழை. 723

---

## 31-வது நாள்

# அந்தியேட்டி அழைப்பு

சிற்றம்பலம் சுந்தரலிங்கம்
(முன்னாள் ஒட்டிசுட்டான் பொலிஸ் அதிபர்)



தோற்றம்:
11-12-51

மறைவு:
5-6-84

6-6-84 புதன்கிழமை நடைபெற்ற அன்னாரின் ஈமக் கிரியைகளில் நேரில்கலந்துகொண்டும் செய்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றி. அத்துடன் 8-7-84 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்
மகள், மனைவி, உறவினர்கள்.

''மீனபவனம்''
நெல்லியடி, கரவெட்டி. 726

---

# 90-வது நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

## திரு. சின்னையா பொன்னம்பலம்

மலர்வு: 26-7-1922 உதிர்வு: 10-4-1984



மனித வாழ்க்கையில் நிச்சயமானது மரணம். இது எப்படி எம்மிடையே நிகழ்கின்றது என்பதனை எவரும் நிச்சயிக்க முடியாது' இருப்பினும் இம் மரணமானது கொடிய உருவில் எங்கள் தெய்வத்தை வந்தடைந்தது விந்தையானதே.

அனைவருடனும் அன்புடன் பழகி எல்லோரையும் உங்கள் நகைச்சுவை கலந்த பேச்சால் எப்பொழுதும் சிரிக்கவைத்து, என்றும் சிரித்த முகத்துடனே வாழ்ந்த எங்கள் உயிரே! எங்கள் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நிரந்தர துயில் கொள்ளுகின்ற உங்களை இனி எப்போது காண்போம். கண்ணில் கொட்டுகிற நீரதனை அஞ்சலியாகச் செலுத்தி 90-ம் நாளான இன்று (7-7-84) உங்கள் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கிறோம்.


11-4-84-ல் நடந்த அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும், மற்றும் உதவிகள் புரிந்து துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**திருமதி த. பொன்னம்பலம் குடும்பத்தினர்**
40/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 647

---

## 'சித்திரச் சோமர்'

கலை மகளின் தூய்மை அவளின் தூயவெண்ணிற ஆடையில் மிளிர்வது போல் என்றும் மாசு மறுவற்ற தூய வெண்ணிறமுழு நீளக்கை சேர்ட்டுடனும் நீளக்காற்சட்டையுடனும் தூய உள்ளத்துடனும் தினமும் துவிச்சக்கர



வண்டியில் மிகவும் அடக்கமாக குறித்தநேரத்தில் வருகைதந்து யாழ் இந்துக்கல்லூரியில் 20 ஆண்டுகளாக லீவு எடுக்காமல் கடமை கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சேவையாற்றிய சித்திர ஆசிரியர் திரு. க. சோமசுந்தரம் அவர்கள் இம்மாதம் 1ம் திகதியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளார்.

இவர் தனது 34 வருட ஆசிரிய சேவையில் 14 ஆண்டுகள் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நற் சேவைபுரிந்துள்ளார். அன்று அக்கல்லூரியில் லீவு எடுக்காத ஆசிரியர்களுக்கு கல்லூரி பரிசளிப்பு விழாவில் ஹார்லிக்ஸ் பரிசாக வழங்குவது வழக்கம். அப்பரிசை

(8ம் பக்கம் பார்க்க)

---

சு. செ. மகாதேவா
மனுதார் சட்டத்தரணி.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற அரியாலை, புறுடி ஒழுங்கை 5/11-ம் இலக்க இல்லத்தில் வதித்த தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

அரியாலை, புறுடி ஒழுங்கை 5/11-ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் சுப்பிரமணியம் தாமோதரம் பிள்ளை,

மனுதார்

மாணசாதன நியாயாதிக்கம் } இல. 3802

எதிராக

தாமோதரம்பிள்ளைபெண் மகேஸ்வரி, இல. 5/11 புறுடி ஒழுங்கை, அரியாலை.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 13 ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக்காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ந் திகதி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

தயாரித்தவர்;
சு. செ. மகாதேவா
மனுதாரின் சட்டத்தரணி.
697

---

## நன்றி நவிலல்

### திருமதி வேலு மாணிக்கம்

தோற்றம்; 1-7-1907
மறைவு: 11-06-1984

அன்புடையீர்,

கடந்த 11-06-84 திங்கட் கிழமை கிறிஸ்துவுக்குள் மகிமை பிரவேசம் செய்த எனது தாயாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தும், எங்கள் மீளாத்துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மகன்
டாக்டர் V. குலசேகரம்,
மாகியம்பதி,
(710) சண்டிலிப்பாய்

---

## ஏல விற்பனை

### குளிர்சாதனப்பெட்டி (DEEP FREEZER)

ஓராண்டு வரை பாவனையிலிருந்த குளிர்சாதனப் பெட்டி ஒன்று Singer Deep Freezer) இம்மாதம் 15-ந் திகதி (15-07-84) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஏலத்தில் விற்பனை ஆகும். இதனை இம்மாதம் 11-ந் திகதி தொடக்கம் 14-ந் திகதி வரை (11-07-84 — 14-07- 4)வரை மாலை 4-00 மணிக்கும் 7-00 மணிக்குமிடையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டிடத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் வாங்குபவர் அதே தினத்தில் முழுப் பணத்தையும் செலுத்தவேண்டும்.

மு. அருளையா,
செயலாளர்,

கிராம அபிவிருத்திச் சங்கம்,
மல்லாகம்,
07-07-1984. (731)

---

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

# ரேட்டறிக் கழகத்தின் இலவச வைத்தியசேவை

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் இலவச வைத்திய சிகிச்சை சேவையை யாழ். ரேட்டறிக் கழகம் திறம்பட நடாத்தியுள்ளது.

அரியாலை அபிவிருத்திச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

யாழ். ரேட்டறிச் சங்கத் தலைவரும் யாழ். சிறைச்சாலை அதிபருமான திரு எஸ்.சத்தியமூர்த்தி தலைமையில் வைத்திய நிபுணர் கோஷ்டி கிராம மக்களுக்கு வைத்திய சிகிச்சைகளை அளித்தனர்.

உடலின் சகல அவயவங்களுக்கான நோய்களுக்கும் சிகிச்சையளிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த டாக்டர்கள் இச்சேவையைச் செய்தனர்.

வைத்திய நிபுணர்கள் வாமதேவா, ஜெகா பசுபதி, விமலா பசுபதி, எஸ்.சேனாதிராசா, ஞானனந்தன், பாரதி செல்வி பத்மினி சோமசுந்தரம் ஆகியோர் வைத்திய சேவையாற்றினர்.

ரேட்டறி கழகத் தலைவர் எஸ்.சத்தியமூர்த்தி பேசுகையில்: ''கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புற வைத்தியசாலைகளுக்கு செல்லமுடியாத வறிய குடும்பத்துப்பிள்ளைகளின் சுகாதார நலன்களைக் கவனிக்கவே இச்சேவையைச் செய்து வருவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் நடமாடும் வைத்திய நிலையம் ஒன்று மூலம் சவை செய்து வருகிறதென்றும்திரு சத்தியமூர்த்தி சொன்னார்.

அரியாலை அபிவிருத்திக் கழகத் தலைவர் திரு எஸ்.சி.பத்மநாதன் நன்றி தெரிவித்துப் பேசினார். (மா)

## 'சித்திரச்சோமர்' ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வருடங்களாகப் பெற்று கல்லூரி அதிபரினதும் ஏனையவர்களினதும் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இவர் கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரியில் பயிற்சி பெற்று 1949ம் ஆண்டு ஆங்கில சித்திரஆசிரியர்களுக்கான சான்றிதழைப் பெற்று 1950ம் ஆண்டு சோமஸ்கந்தாக்கல்லூரியில் முதல் நியமனத்தைப் பெற்று 1964ம் ஆண்டில் யாழ் இந்துக்கல்லூரிக்கு மாற்றலாகி அங்கு தமதுகடமையை சிறப்பாகபுரிந்து அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் சகலரினதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

இவரிடம் சித்திரம் பயின்ற மாணவர்கள் பலர் அகில இலங்கை ரீதியிலும், சர்வ தேசரீதியிலும் பல விருதுகளைப் பெற்று உள்ளனர். அகில இலங்கை சித்திரக்கண்காட்சியில் யாழ் இந்து மாணவன் 2ம் இடம்பெற்றதும். இந்தியாவில் டெல்லியில் நடைபெற்ற சங்கர்ஸ் சர்வதேச சித்திரகண்காட்சியில் பலர் பரிசுகள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆத்மசிந்தனை என்றும் ஒருவனை நிலைகுலையச் செய்யாது என்பதற்கு இவர் ஓர் உதாரணம் எவ்விததுன்பமும் நேரிடினும் புன்சிரிப்புடன் அதை ஓர் ஞானிபோல் எதிர் நோக்கும் எம்சித்திர ஆசிரியரின் அவா அவர் இளைப்பாறுவது இந்துக் கல்லூரிக்கு ஒரு இழப்பாகவே இருக்கும்.

நா. நல்லையா

## இன்று

[வண்ணார்பண்ணை]

குப்பிளான் தெற்கு சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று ஆரம்பமாகின்றது.

திரு பொ.கந்தையா தலைமையில் நடைபெறும் இவ் விழாவை தொழிலதிபர் திரு. க.கனகராசர் மங்கள ஒளி ஏற்றி ஆரம்பித்து வைப்பார்

நிலைய முன்றலில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

## இற்புதர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பம் தீர்க்கும் பிணியகற்றும் கேட்கும் வரம் கொடுக்கும் அருளாளராக மிளிர்கின்றார்.

இப்புனிதர் புங்குடுதீவினில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி செய்த - செய்யும் அற்புதங்களுக்குத் இத்திருப்பதியில் திரளும் மக்கட் பெருவெள்ளமே மிகச் சிறந்த சான்று. எனவே கோடிஅற்புதரான புங்குடுதீவு அந்தோனியார் திருவிழா மக்கள் விழாவாக மலர்ந்து மக்கள் வெள்ளத்தில் அந்தோனியார் நாளை ஞாயிற்றுக்கிழமை அருட்பவனி வருகின்றார். இந்நன்னாளில்அந்தோனியார்அருளால் மக்கள் அமைதிவாழ்வு பெற நாமும் இறைஞ்சிடுவோம்,

## மரண அறிவித்தல்

### திருமதி கிருபை ஹென்ஸ்மன்

சுண்டிக்குளியைச் சேர்ந்த திருமதி கிருபை ஹென்ஸ்மன் (இளைப்பாறிய ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்) காலமாகிவிட்டார். இவர் விக்ரரின் (இளைப்பாறிய அதிபர், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், காலம் சென்ற எட்வின், காலம் சென்ற பாலா, டேவோ (வர்த்தக வங்கி கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் யஸ்மின் (ஹட்டன் நாஷனல் வங்கி கொழும்பு) யேன் (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலம் சென்ற ஞானம் ஐயாத்துரை, பரம்சோதி, ஐயாத்துரை, பூரண சற்குணன் ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, காட்டுக்கந்தோர் ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக இன்று (7 - 7 - 84) சனிக்கிழமை மாலை 3-30 மணியளவில் கொட்டடியிலுள்ள சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 741

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389 — 24126.

## கடத்தல் நாடகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியவர்கள், அகிலஇந்திய சீக்கிய மாணவ சம்மேளனத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் என்று இந்திய ஏர்லைன்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இயக்கத்தில் ஒரு லட்சம் பேர் அங்கம்வகிப்பதாகவும் அவர் கூறினார்.

விமானத்தை திசை திருப்பியவர்களுக்கோ, பிரயாணிகளுக்கோ காயங்கள் ஏற்பட்டதுபற்றி எதுவும் தெரியாது என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (வெ)

(3ம் பக்கமும் பார்க்க)

## ஏழு கிளைகளில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கிவருகின்றன.

இவற்றுள் 6 வங்கிக்கிளைகளில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரிவீதியிலுள்ள பிரதான இலங்கை வங்கிக்கிளையிலேயே காசோலையும் பணமும் கொடுக்கல் வாங்கல் செய்யலாம் என்றும் ஏனைய கிளைகளில் காசோலை மாத்திரம் வைப்பிலிடலாம் என்றும் கடந்த 3-ம் திகதி வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரதான வங்கிக்கிளையில் ஏனைய பகுதிகளிலிருந்து வரும் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடியாத நிலையில் இருந்ததும் மேற்கொண்டு மாவட்ட முகாமையாளர் எடுத்த முயற்சியின் பேரில் குறிப்பிட்ட மூன்று கிளைகளைத்தவிர மற்றவை பணம் கொடுக்கல் வாங்கலுக்கு மீண்டும் இப்பொழுது திறக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (மா)

## ரூபா 1 லட்சம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட கடைஉரிமையாளர், தாவடிப் பிள்ளையார் கோவிலடியில் சைக்கிளைநிறுத்திவிட்டு, வணங்கிக்கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் பயமுறுத்தி அவரிடமிருந்த நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொண்டபையை பறித்துக்கொண்டு சென்றுவிட்டதாக சுன்னாகம் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. (மா)

## தீயணைக்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ன்ற் பினன்ஸ் லிமிட்டெட் நவீன சந்தை 10,000-00, ஹரிசன்ஸ் அன்ட் குரெஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்டெட் 330, ரிபி,. ஜெயா மாவத்தை 5,000-00, நல்லூர் தெற்கு சனசமூக நிலையம் 1,000-00, அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் மரியதாஸ் 25.00, பி. கே. முகமட், கே. கே. எஸ். வீதி 101-00, லங்கா சீமென்ற் லிமிட்டெட், காங்கேசன்துறை 15,697-00, ந. ஜெயசிங்கம் 500.00, ஈ. மகேசன் 100-00, கணேசன் மோட்டோர்ஸ் மா. சின்னத்தம்பி 100-00, யாழ். பாமர்சி 100-00, யாழ். பொது அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சிவகுமாரன் 250-000, டாக்டர் பாக்கியநாதன் 150-00, டாக்டர் இரவீந்திரா 150-00, டாக்டர் செல்வி யோகநாதன் 150-00, டாக்டர் திருமதி இராசநாயகம் 150-00, டாக்டர் திருமதி கணேசமூர்த்தி 150-00, டாக்டர் சேவியர் 250-00, டாக்டர் ரி. கணேஸ்வரன் 150-00, டாக்டர் சி. ஞானநாதன் 250-00 அ கணபதிப்பிள்ளை, கணேசானந்தாஸ் நவீன சந்தை 200-00. வைத்திய கலாநிதிகள் யாழ். அரசினர் வைத்தியசாலை ரிக்கற் விற்பனை மூலம் வசூல் 1,050-00 மொத்தம் 313,197-00

## இப்படியும் நடக்கிறது

**யாழ்.** பல்கலைக்கழகத்துக்கு 'ஸ்கூட்டரில்' சென்றுவிட்டு யாழ் நகர் திரும்பியவர், ஏதோ நினைவாக தமது 'பேர்ஸை' தடவினார். தலையில் யாரோ சுத்தியலால் அடிப்பதுபோன்ற பிரமை ஏற்பட்டது;

'பேர்ஸை' காணவில்லை

அதாவது எண்ணூறு ரூபாவும், தேசியஅடையாள அட்டை, வங்கி பற்றுச்சீட்டு உட்பட சில முக்கிய குறிப்புப் பத்திரங்களும் அந்தப் பெரிய 'பேர்ஸி'ல் இருந்தது! எல்லாமே ஒரேநேரத்தில் தொலைந்துவிட்டது.

சில மணிநேரம் சென்றிருக்கும். ஒருவர் பத்திரமாக அந்தப்பேர்ஸை' ஒப்படைத்ததாகக் கூறி உறவினர் ஒருவர், உரியவரிடம் 'பேர்ஸை' கையளிக்கின்றார். பேர்ஸுக்குள் இருந்தவை எல்லாமே, அப்படி அப்படியே காணப்படுகின்றன!

பேர்ஸுக்குரியவர்; காரைநகரைச் சேர்ந்த ஏ. யோகேந்திரா, கண்ணியத்துக்குரியவர்; யாழ். பண்ணை ஆஸ்பத்திரியைச்சேர்ந்த எஸ்.கதிர்காமராசா. யாழ்ப்பாணம் நிமிர்ந்து நிற்கிறது.

-ஊடுருவி

## சைவசிறுருக்கு ஒருநாள் மதிய உணவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவச் சிறுர் இல்லத்தின் அவல நிலை குறித்து 'ஈழநாடு' 5-7-84 பதிப்பில் வெளிவந்த செய்திக்குப் பலன் கிடைக்க ஆரம்பித்துள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவற் சபையினர் செய்தியில் வெளியான தகவல்களைக் கவனத்தில் கொண்டு அங்கு வதியும் சைவச் சிறுர்கள் 253 பேருக்கும் வரும் 12-ம் திகதி தீர்த்தத் திருவிழாவன்று மதியம் சுவையான அறுசுவைஉணவை வழங்க முன்வந்துள்ளனர். இதற்காக இரண்டாயிரம் ரூபாவை திருநெல்வேலி சைவச் சிறுர் இல்ல முகாமையாளர் திரு. எஸ். ஆர். கனகநாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

முதல் நடவடிக்கையாக இந்த உதவியை வழங்குவதாகவும் அவருக்கு பொருளாளர் திரு. சோ. செல்வரத்தினம் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மல்லாகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று வழமைபோல் நீதிவான் நீதிமன்றம்கூடி பணிகள் நடைபெற்றன.

## கருத்தரங்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திரு. கே. நேசையா 'சுதந்திர சமத்துவமும் மனித உரிமைகளும்' பற்றியும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பரராசிங்கம் 'கல்வியும் 'மனித உரிமைகள்' என்னும் விடயம் தொடர்பாகவும் சட்டத்தரணி திரு ஆர். பாலசுப்பிரமணியம் 'தனிமனித சுதந்திரம்' பற்றியும் பேசவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல்களும் இடம் பெறும்.

சென். ஜோன்ஸ் கல்லூரி இன்ரறட் கழகம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

## யாழ். லயன்ஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிப்பார்.

ஜுலைக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்திருந்த அகதிகளில் ஒருபகுதியினரை குருநகரிலுள்ள அகதிகள் இல்லத்தில் குடியமர்த்தி. யாழ்ப்பாணத்தவர்களும் வெளிநாட்டவரும் பாராட்டுமளவுக்கு உதவிபெற்று நடத்தியதுடன், மன்னார், கிளிநொச்சிப்பகுதிகளில் காணி எடுத்து அகதிகளுக்குப் புனர்வாழ்வளித்ததும் கடந்த காலத்தலைவர் இருந்த காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது, (மா)

## வேலணையில்

(வேலணை)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி. வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி அதிபர் திரு. மு. சிவராச ரத்தினம் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெறவுள்ளது

## இன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக திட்ட அமுலாக்கல் அமைச்சின் பணிப்பாளர் கலாநிதி வி. அம்பலவாணர் கலந்து கொள்வார். திருமதி சிவகாமி அம்பலவாணர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பார்.

## சந்தியில்....

(1ம் பக்கத் தெடாச்சி)

நிற கோடிட்ட சாரமும் வெள்ளைநிறச் சேட்டும் அணிந்துள்ளார்.

## இன்று நிகழும் வானியற் காட்சி

[யாழ்ப்பாணம்]

இன்று இரவு 10-30 மணியளவில் சனிக்கிரகம் சந்திரனுல் மறைக்கப்படும். வானம் வெளிப்பாயிருந்தால் இதனை எல்லோரும் பார்க்கலாம்.

பின்னிரவு 3-30 மணியளவில் சந்திரன் அதற்குத் தெற்கே 4 பாகையில் உள்ள செவ்வாயுடன் சமாகமாகும். சந்திரன் 1-30 மணியளவில் அஸ்தமனமாவதால் அதற்குமுன் பார்க்கும் போது சனி, சந்திரன் செவ்வாய் மூன்றும் முக்கோணமாக அமைந்து காணப்படுவது ஓர் அழகான காட்சியாகும் என்று யாழ். வானியற்கழகம் அறிவிக்கிறது.